**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்**

**தேதி 25.06.2025 நேரம் மாலை 6.10 மணி**

-----------------------------------------------------------------------------------------

*தலைப்புச் செய்திகள்*

சம்விதான் ஹத்யா தினத்தை ஒட்டி, அவசர நிலைக்கு எதிரான போராட்டத்தில் உறுதியாக நின்றவர்களுக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி வணக்கம் செலுத்தி உள்ளார்.

இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா பயணம் செய்யும் ஆக்சியம்-4 விண்கலம், இன்று அதிகாலை அமெரிக்காவின் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

விண்வெளிப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வீரர் சுபான்ஷு சுக்லாவிற்கு, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

புதுச்சேரியில், கடலோர பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

----------------------------

***சம்விதான் ஹத்யா தினம்-மோடி*** 1 (17)

சம்விதான் ஹத்யா தினத்தை ஒட்டி, அவசர நிலைக்கு எதிரான போராட்டத்தில் உறுதியாக நின்றவர்களுக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி வணக்கம் செலுத்தி உள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், இந்தியாவின் ஜனநாயக வரலாற்றில், இருண்ட அத்தியாயங்களில் ஒன்றை, நாடு இன்று நினைவு கொள்வதாக தெரிவித்துள்ளார். 50 ஆண்டுகளுக்கு முன் இதே நாளில்,

இந்திய அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள மதிப்புகள் ஒதுக்கி வைக்கப்பட்டதோடு, அடிப்படை உரிமைகள் இடை நிறுத்தப்பட்டதாகவும், பத்திரிக்கை சுதந்திரம் ஒழிக்கப்பட்டதுடன், பல அரசியல் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், மாணவர்கள், மற்றும், குடிமக்கள் சிறையில் அடைக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். அவசரகாலத்தின் போது, இந்தியாவின் ஜனநாயகக் கட்டமைப்பை பாதுகாப்பதற்கும், தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த சுதந்திர போராட்ட வீரர்களின் லட்சியங்களை பாதுகாப்பதற்கும் நாடு முழுவதிலும் இருந்து, அனைத்து தரப்பு மக்களுடன், பல்வேறு சித்தாந்தங்களை பின்பற்றுபவர்களும் ஒருவொருக்கொருவர் நெருக்கமாக பணியாற்றினர் என்றும், பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

***சம்விதான் ஹத்யா தினம்-மோடி*** 2 (5)

இன்று அனுசரிக்கப்படும் சம்விதான் ஹத்யா தினம்,கடந்த 1975ஆம் ஆண்டு, ஜூன் 25ஆம் தேதி, இந்திய அரசியலமைப்பு நசுக்கப்பட்டபோது என்ன நடந்தது என்பதை நினைவூட்டுவதாகவும், அவசர காலத்தின் செயல்பாடுகளால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் அஞ்சலி செலுத்தும் நாளாகவும் உள்ளது. இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு.....

**(வாய்ஸ்)**

*சம்விதான் ஹத்யா தினம்-மோடி 3 (15)*

<u>**(வாய்ஸ்)**</u>

அப்போதைய எதிர்கட்சித் தலைவர்கள் ஜெய்பிரகாஷ் நாராயண், மொரார்ஜி தேசாய், அடல் பிகாரி வாஜ்பாய், எல்.கே. அத்வானி, மற்றும் பலர், அவசர காலத்தின் போது உள்நாட்டு பாதுகாப்பு பராமரிப்பு சட்டம் மிசாவின் கீழ் கைது செய்யப் பட்டனர். கிட்டத்தட்ட 35 ஆயிரம் பேர், விசாரணை இல்லாமல் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். ஒரு லட்சத்து 83 ஆயிரம் கைதிகள் மட்டுமே அடைக்கும் வசதி உள்ள இந்திய சிறைகளில், 2 லட்சத்து 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைதிகள் அடைக்கப் பட்டனர். ஆகாஷ்வாணியின் மனதின் குரல் நிகழ்ச்சியில் இதுகுறித்து தமது எண்ணங்களை பகிர்ந்து கொண்ட பிரதமர் திரு. நரேந்திர மோடி, அவசரகாலத்தின் போது அராஜகங்களை எதிர்கொண்ட போதிலும், ஜனநாயகம் மீதான மக்களின் நம்பிக்கை அப்படியே உள்ளது என்றார். இன்று, சம்விதான் ஹத்யா தினம் கடைபிடிக்கப்படுவதை ஒட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், காங்கிரஸ் கட்சியின் அதிகாரப் பசியால் இயக்கப்பட்ட அநீதியின் சகாப்தம் அவசரநிலை என்று தெரிவித்துள்ளார். அதிகாரம்,

*சம்விதான் ஹத்யா தினம்-மோடி 4 (9)*

**(வாய்ஸ்)**

சர்வாதிகாரமாக மாறும்போது, அதை வேரோடு பிடுங்குவதற்கான வலிமை மக்களுக்கு உண்டு என்பதையும், இந்த நாள் அனைவருக்கும் நினைவூட்டுகிறது என்றும் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், தமது சமூக ஊடகப் பதிவில், அவசர நிலையை அமல்படுத்தியதன் மூலம் இந்திய ஜனநாயகத்தை நசுக்க,

50 ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு மோசமான முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

பிஜேபி தேசிய தலைவர் திரு. ஜே.பி நட்டா, அவசரகாலத்தில் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக தங்கள் இன்னுயிரை தியாகம் செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

----------------------------

***ஆக்சியம்*** 4 (17)

இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா உள்ளிட்டோர் பயணம் செய்யும் ஆக்சியம்-4 விண்கலம், இன்று அதிகாலை பால்கான்-9 ராக்கெட் மூலம் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து ஏவப்பட்ட இந்த விண்கலம், நாளை மாலை 4.30 மணிக்கு, சர்வதேச விண்வெளி மையத்துடன் இணைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்வெளிக்கு செல்லும் இந்த குழுவில், இந்திய வீரர் சுபான்ஷு சுக்லாவுடன், அமெரிக்கா, ஹங்கேரி, போலந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த வீரர்களும் பயணிக்கின்றனர். கடந்த 1984ஆம் ஆண்டில், விங் கமாண்டர் ராகேஷ் ஷர்மா, சோவியத் நாட்டின் விண்கலத்தில் பயணம் மேற்கொண்ட 40 ஆண்டுகளுக்கு பிறகு, விண்வெளிக்கு செல்லும் 2ஆவது இந்திய விண்வெளி வீரர் கேப்டன் சுபான்ஷு சுக்லா ஆவார். தற்போது ஆக்சியம்-4 விண்கலத்தில் பயணம் மேற்கொண்டுள்ள குழுவினர், விண்வெளி நிலையத்தில் 2 வாரங்கள் தங்கி, பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொள்ள உள்ளனர். இதற்கிடையே,

இந்திய வீரர் சுபான்ஷு சுக்லா, தமது குழு விண்வெளியை அடைந்தது குறித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் செய்தி அனுப்பி உள்ளார்.

----------------------------

***சுபான்ஷு-வாழ்த்து*** (15)

இந்திய வீரர் சுபான்ஷு சுக்லாவின் விண்வெளிப் பயணம் குறித்து குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், ஒரு இந்தியர், நட்சத்திரங்களுக்குள் பயணிப்பதை பற்றி ஒட்டுமொத்த தேசமும், உற்சாகமும், பெருமிதமும் கொள்வதாக தெரிவித்துள்ளார். நாசாவுக்கும், இஸ்ரோவுக்கும் இடையிலான நீடித்த கூட்டாண்மையை பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ள இந்த ஆக்சியம் – 4 விண்கலப் பயணத்தின் வெற்றிக்கு, தமது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமது சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், இந்திய விண்வெளி வீரர் குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லா, சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு சென்ற முதல் இந்திய வீரர் என்ற பெருமையை பெறுவதாக தெரிவித்துள்ளார். 140 கோடி இந்தியர்களின் விருப்பங்கள், நம்பிக்கைகள், மற்றும், அபிலாஷைகளை குரூப் கேப்டன் சுக்லா தன்னுடன் எடுத்துச் சென்றதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

----------------------------

***எமர்ஜென்சி-புதுச்சேரி*** (13)

50 ஆண்டுகளுக்கு முன்பு அமல்படுத்தப்பட்ட அவசர நிலை, ஜனநாயகம் மற்றும் தேசத்தின் ஆன்மா மீதான தாக்குதல் என்று, மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை இணையமைச்சர் திரு. சதீஷ் சந்திர துபே தெரிவித்துள்ளார். புதுச்சேரியில் இன்று பிஜேபி சார்பில் நடைபெற்ற, சம்விதான் ஹத்யா தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், அரசியலமைப்பு சிதைக்கப்பட்டதாகவும், அவசர காலத்தில் குடிமக்கள் கட்டாய கருத்தடை மற்றும் குடிசைப் பகுதிகளை இடிப்பது போன்ற அராஜகங்களை எதிர்கொண்டதாகவும் கூறினார். அவசர காலத்தின கொடூரங்களை நினைவு கூர்ந்த அவர், அந்த காலகட்டத்தில் வாழ்ந்தவர்கள் அந்த இருண்ட காலத்தின் நிகழ்வுகளை நினைத்து, இன்றும் நடுங்கிக் கொண்டிருப்பதாக தெரிவித்தார். மேலும், பிஜேபியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற, அரசியல் சாசன படுகொலை தினம் தொடர்பான புகைப்பட கண்காட்சியையும் மத்திய இணையமைச்சர் திறந்து வைத்தார்.

----------------------------

***ரங்கசாமி*** (9)

புதுச்சேரி அரசு கூட்டுறவுத் துறையின் இளநிலை ஆய்வாளர் பணிக்கு, கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற எழுத்துத் தேர்வில் 38 பேர் தேர்வு செய்யப் பட்டனர். இவர்களில், 8 பேர் பல்வேறு காரணங்களால் அப்பணியில் சேராததால், காத்திருப்பு பட்டியலில் வைக்கப்பட்டு இருந்தனர். இந்நிலையில் இன்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமி,

அவர்களுக்கு இளநிலை ஆய்வாளர் பதவிக்கான பணி ஆணைகளை வழங்கினார். சட்டப் பேரவை வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு. யஷ்வந்த்தைய்யா ஆகியோர் உடன் இருந்தனர்.

-----------------------------

***கடல் பாதுகாப்பு*** (9)

புதுச்சேரியில் கடலோர பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. இந்த ஒத்திகையின் போது, கடல் வழியாக புதிய நபர்கள், மற்றும் புதிய படகுகள் வருவதை கண்காணிக்கும் பணியில், புதுச்சேரி கடலோரப் பாதுகாப்பு காவலர்கள் ஈடுபட்டனர். காவல் துறை துணைத் தலைவர் திரு. சத்திய சுந்தரம், முதுநிலை காவல் கண்காணிப்பாளர் திரு. கலைவாணன் ஆகியோர், கடலோர காவலர்களுடன் இணைந்து, கடலுக்குள் சென்று, ஆய்வு மேற்கொண்டனர். இந்த கடலோர பாதுகாப்பு ஒத்திகை குறித்து புதுச்சேரி காவல் துறை துணைத் தலைவர் திரு. சத்திய சுந்தரம் கூறுகையில்....

(வாய்ஸ்)

-----------------------------

***காரைக்கால் காவிரி*** (8)

மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்பட்ட காவிரி நீர், காரைக்கால் மாவட்டம் கடை மடை பகுதியான நல்லம்பல் நூலாறு தடுப்பணைக்கு இன்று காலை வந்து சேர்ந்தது. இன்று காலை 11 மணிக்குநடைபெற்ற

நிகழ்ச்சியில், குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு.பி.ஆர். என் திருமுருகன் கலந்து கொண்டு, குறுவை பாசனத்திற்காக காவிரி நீரை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் திருநள்ளாறு சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.ஆர் சிவா, பொதுப்பணித் துறை அதிகாரிகள், விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

----------------------------

***மாங்கனி திருவிழா*** (6)

காரைக்காலில், அடுத்த மாதம் 10ஆம் தேதி நடைபெறும் மாங்கனித் திருவிழா முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம், பொறுப்பு மாவட்ட ஆட்சியர் திரு. சுபாஷ் தலைமையில் இன்று நடைபெற்றது. இதில் துணை மாவட்ட ஆட்சியர் திரு. செந்தில்நாதன், கோவில் நிர்வாக அதிகாரி திரு. அருணகிரி நாதன், தெற்கு காவல் கண்காணிப்பாளர் திரு. சுப்ரமணியன் மற்றும், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

----------------------------

***ஆபரேஷன் சிந்து*** (9)

ஆபரேஷன் சிந்து நடவடிக்கையின் ஒருபகுதியாக இன்று காலை, இஸ்ரேலில் இருந்து இந்திய விமானப் படை விமானம் மூலம் தாயகம் திரும்பிய 224 இந்தியர்களை, மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை இணையமைச்சர் திருமதி ஷோபா கரண்ட் லஜே, வரவேற்றார். இதுவரை 818 பேர், இஸ்ரேலில் இருந்து இந்தியா அழைத்து வரப்பட்டுள்ளனர். இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள மத்திய

வெளியுறவு அமைச்சகம், இந்தியக் குடிமக்களின் பாதுகாப்பிற்கு அரசு எப்போதும் முன்னுரிமை அளிக்கும் என்று தெரிவித்துள்ளது.

-----------------------------

***வானிலை*** (6)

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, அடுத்த 2 தினங்களுக்கு, தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலின் ஒருசில பகுதிகளிலும், இடி-மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஓரிரு இடங்களில் பலத்த தரைக் காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக் கூடும் என்றும், தெரிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------------

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

சம்விதான் ஹத்யா தினத்தை ஒட்டி, அவசர நிலைக்கு எதிரான போராட்டத்தில் உறுதியாக நின்றவர்களுக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி வணக்கம் செலுத்தி உள்ளார்.

இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா பயணம் செய்யும் ஆக்சியம்-4 விண்கலம், இன்று அதிகாலை அமெரிக்காவின் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

விண்வெளிப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வீரர் சுபான்ஷு சுக்லாவிற்கு, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

புதுச்சேரியில், கடலோர பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**